எதிர்காலத்திலே என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வரு கிறது. வருகின்ற ஆண்டுகளில் அத்தகைய நல்ல திட்டங்கள் கடலூர் துறைமுகத்தினுடைய அபிவிருத்திக்காக நிறை வேற்றப்படும்.

ஊராட்சித் தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல்

*2367—திரு. ஏ. செங்குட்டுவன் ;

மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சித் தலைவர்கள் நிர்வாக சம்மந்த விவரங்களை தெளிவாக தெரிந்துகொள்ளும் வகையில் ஒருவார காலத்திற்கு விளக்கப் பயிற்சியளிக்கும் புதிய திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–4–1989-ல் வெளியிட்ட ஊரக வளர்ச்சித் துறை அரசு ஆணை எண். 241-ன்படி, ஊராட்சித் தலைவர்களுக்கு ஊராட்சி நிர்வாக நடைமுறையை விளக்கி 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி மாநிலம் முழுவதும் 3–6–1989 முதல் 13–7–1989 வரை நடத்தி முடிக்கப்பட்டது.

9-30 மணி

திரு. ஏ. செங்குட்டுவன் மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஊராட்சி நிர்வாகம் சிறப்பாக நடைபெற, ஊராட்சி மற்றும் நகராட்சிகளினுடைய சட்ட திட்டப் புத்தகம், விதிமுறைப் புத்தகம், பல நகராட்சிகளில் இல்லை. தற் போது புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களும் இல்லாத நிலையில் இருக்கிறது. அவற்றை அரசு தமிழிலும், ஆங் கிலத்திலும் அச்சிட்டு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கோ. சி. மணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி நிர்வாக நடைமுறை விளக்கக் குறிப்புகள் புத்தக வடிவில் அச்சடிக்கப்பட்டு ஒவ்வொரு வருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. இதற்கு ஆங்கிலத்தில் தேவை இருந்தால் திரும்பவும் மொழிபெயர்த்துக் கொடுக் கலாம்.

1990 சனவரி 25]

திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி, நகராட்சி நிர்வாகத்தில் நகராட்சிகளினுடைய வரைபடங்கள் பல ஆண்டுக் காலங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்டன. அவை எல்லாம் பாழ்பட்டு அடுக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றைப் புதிதாக நகராட்சிகளுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஊராட்சி மன்றத்தைப் பொறுத்தது: ஊராட்சி மன்றத் தலைவர்களைப் பொறுத்தது.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்குச் சேரவேண்டிய வரி, தொழில் வரி போன்றவற்றை தற்போதுள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் சரிவர வசூலிப்பது இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. எனவே அவற்றை முன்பு போல.......... (மணி அடிக்கப் பெற்றது).

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய பலர் உள்ளாட்சி மன்றங்களிலே தலைவர்களாக இருக்கக்கூடிய காரணத்தினால் அவர்களுக்கும் வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்பாக பயிற்சி அளிக்கப்பட்டால் அது அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நன்மை பயக்கக்கூடிய அளவிலே இருக்கும் என்பதால் அவர்களுக்கும் விசேஷப் பயிற்சி உடனடியாக அளிக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அளிக்கப்பட்ட பயிற்சி ஊராட்சி, பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அத்தனை பேருக்கும் அளிக்கப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ 7 ஆயிரத்துச் சொச்சம் பேர் அதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அப்போது அதிலே கலந்து கொண்டு இருப்பார்கள். தனியாக அது தேவை இல்லை எனக் கருதுகிறேன்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவரும் அந்தந்தப் பகுதியில் இருக்கிற நடைமுறை நிர்வாகங்கள் பலவற்றைத் தெரிந்துகொள்ள இயலாத நிலையில் இருப்பதால் பல அத்தியாவசியக் காரியங்களை—தெரு விளக்கு பராமரித்தல், குடிநீர் பராமரிப்பது போன்ற காரியங்களை—அவர்கள்

செம்மையாக உடனுக்குடன் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் நம்முடைய அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி மன்றத் தலைவர்களுடைய கூட்டத்தை கூட்டி அந்த விளக்கங்களை எடுத்துச் சொல்வதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 4 ஆண்டுக் காலம் ஆகிறது. அவர்களுடைய பதவிக் காலம் இன்னும் ஓராண்டில் முடிவுபெற இருக்கிறது. அவர்கள் நல்ல பயிற்சி பெற்று இருப்பார்கள் என்றுதான் நம்புகிறேன். எனவே அப்படி ஏதாவது தேவைப்படுமாயின் பிறகு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன் .... (மணியடிக்கப் பெற்றது).

பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்

*3327—திரு. க. சொ. கணேசன்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—:

கிராமங்களில் ஆதி திராவிட மக்களுக்கு அரசின் உதவியால் வீடு கட்டிக் கொடுப்பதைப் போன்று பேரூராட்சிகளிலும் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கு இது குறித்து அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதுபோல், பேரூராட்சிகளில் உள்ள ஆதி திராவிடர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இது அவசியம் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு அரசு திரும்ப பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.